**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **CC.No.304/2017**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**1**

**Defence**
**Court**

**Name** **:** சரவணன்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 22.07.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது தேனி மாவட்டம் பெரியகுளம் போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு சார்ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்னர் தேனி போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு தலைமைக்காவலராக பணிபுரிந்துவந்தேன். நான் கடந்த 14.09.2014 ம் தேதி காலை 10.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது நானும் தலைமைக்காவலர் முத்துராஜ்,

சிறப்பு சார்ஆய்வாளர் மூவேந்தன் இருந்தபோது ரகசிய தகவலாளி தெரிவித்த தகவலின் பேரில் சிறப்பு சார்பாய்வாளர் தலைமையில் நாங்கள் மூவரும் தகவலாளியுடன் 10.10 மணிக்கு புறப்பட்டு 10.20 மணிக்கு தேனி-பெரியகுளம் சாலையில் உள்ள இ.பி ஆபிஸ் அருகில் கண்காணித்து கொண்டிருந்தபோது காலை சுமார் 11.00 மணிக்கு தகவலாளி அடையாளம் காட்டி மறைந்துகொண்டார். அங்கு வந்த நபரை சிறப்பு சார்ஆய்வாளர் பிடித்து விசாரிக்க அவர் தேனி மாவட்டம், கம்பம் உலகத்தேவர் தெருவை சேர்ந்த பாலுசாமி மகன் முருகன் என்ற பொழிமுருகன் என்று கூறினார். அவரிடம் சிறப்பு சார்பாய்வாளர் தங்களுக்கு கிடைக்கப்பட்ட தகவலை கூறி உங்களை சோதனை செய்ய வேண்டும் என்றும் தாங்கள் விரும்பினால் அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ, அரசு பதிவிதழ் பெற்ற அலுவலர் முன்னிலையிலோ சோதனை செய்ய உரிமை கோரலாம் என்று தெரிவித்தார். அதற்கு எதிரி தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறியதை உதவி ஆய்வாளர் சம்மத கடிதம் எழுதி எங்களை சாட்சிகளாக நியமித்து பதிவு செய்தார். பின்னர் அவர் வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் பை யை சோதனை செய்த போது அதில் உலர் நிலையில் கஞ்சா என்ற போதை பொருள் இருந்தது . அதை எடை போட்டு பார்க்க 3 கிலோ இருந்தது. அதில் இருநது மாதிரிமற்றும் பகுப்பாய்வுக்காக தலா 25 கிராம் எடையுள்ள கஞ்சாவை எடுத்து காக்கி கவரில் வைத்து நூலால் சுற்றி வழக்கு விபர தாள் ஒட்டி NIB சீல் வைத்தோம். அதற்கு S1. S2 எனக்குறியீடு செய்தோம். மீதம் இருந்த 2 கிலோ 950 கிராம் கஞ்சாவை அதே வெள்ளை நிற பிளாஸ்டிக் பையில் வைத்து சணலால் கட்டி NIB சீல் வைத்தோம். அதற்கு P1 என குறியீடு கொடுத்தோம். எங்களை சாட்சியாக வைத்து அத்தாட்சி தயார் செய்தோம். நானும் தலைமைக்காவலர் முத்துராசும் அத்தாட்சியில் கையொப்பம் இட்டோம். பின்னர் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதையும் உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்.

பின்னர் 13.35 மணிக்கு எதிரியை கைது செய்து எதிரியையும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் 14.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அவருக்கு நான் உதவியாக இருந்தேன். என்னை சார்பாய்வாளர் விசாரித்தார். சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ.1 ஆகும். அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆகும். ஆய்வு நமூனா. அ.சா.ஆ.3 ஆகும். கைது நமூனா அ.சா.ஆ.4 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

14.09.2014ம் தேதி சுமார் காலை 8.00 முதல் நிலையத்தில் இருந்தேன். உதவி ஆய்வாளருக்கு தகவல் கிடைத்த விபரம் எனக்கு நேரில் தெரியாது. ஆய்வாளர் அன்றைய தினம் நிலைய பொறுப்பில் இல்லை. காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். சம்பவ இடத்திற்கும் டெம்போடிராவலர் என்ற வாகனத்தில் சென்றோம். அன்றைய தினம் ரோல்கால் நடந்தபோது யார் யாருக்கு என்னென்ன பணி ஒதுக்கப்பட்டிருந்தது என்று தற்போது ஞாபகம் இல்லை. இ.பி ஆபிசுக்கு அருகே சிறிய பெட்டிக்கடைகள் உள்ளது. தேனி -பெரியகுளம் ரோட்டில் போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். நாங்கள் தனி நபர் சாட்சிகளை அழைக்க முற்பட்டபோது அந்த நேரத்தில் அந்த இடத்திற்கு யாரும் முன் வரவில்லை. நாங்கள் இ.பிஆபிசில் இருந்து எவரையும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. சார்பாய்வாளர் என்னை விசாரித்தபோது எதிரி எங்கிருந்து எந்த திசையில் வந்துகொண்டிருநதார் என்று நான் குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தை யார் எழுதினார்கள் என்ற விபரம் நான் கூறவில்லை என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. சோதனை சம்மத கடிதம் தட்டச்சு செய்யப்பட்டதா கையால் எழுதப்பட்டதா என்றால் அது முன்னதாக கணினியில் எடுக்கப்பட்ட படிவத்தில் மீதம் உள்ள பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டது. சோதனை சம்மத கடிதம் எந்த இடத்தில் வைத்து

தயாரிக்கப்பட்டது என்ற விபரம் காணப்படவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம் எத்தனை மணிக்கு பெறப்பட்டது என்ற விபரம் சம்மதக்கடிதத்தில் காணப்படவில்லை என்றால் சரியல்ல. 11.00 மணிமுதல் 12.00 மணிவரை தயாரித்து கையொப்பம் பெற்றோம். எந்த நேரத்தில் கையொப்பம் பெற்றோம் என்று குறிப்பாக கூறப்படவில்லை என்றால் சரிதான். அதில்தேதி விபரம் காணப்படவில்லை என்றால் சரிதான். எதிரி சான்று பொருட்களை தம்மிச்சையாக எடுத்து ஆஜர் படுததியதாக நான் உதவி ஆய்வாளரிடம் கூறியுள்ளேனா என்று ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்டும் என்னிடம் குவிமுச 161 வாக்குமூலத்தில் அவ்வாறு எதிரி தம்மிச்சையாக எடுதது ஆஜர்படுததிய வாசகம் காணப்படவில்லை என்றால் சரிதான். எந்த வகையான தராசில் எடைபோட்டோம் என்ற விபரத்தையும் கூறியதாக பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். யாரால் எடைபோட்டப்பட்டது யாரால் பகுப்பாய்வுக்கு எடுக்கப்பட்டது என்ற விபரம் சார்பாய்வாளர் விசாரணையில் கூறப்படவில்லை என்றால் சரிதான். கைது குறிப்பாணையில் சாட்சிகளின் கையொப்பமும் எனது கையொப்பமும் காணப்படவில்லை என்றால் சரிதான் கைது நமூனாவில் கையொப்பம் உள்ளது. அதில் 13.35 மணிக்கு எதிரியை கைதுசெய்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை 14.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைது குறிப்பாணையில் காலம்-2 ல் குற்ற எண் மற்றும் சட்ட பிரிவுகள் காணப்படுகிறது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்னதுபோல் எந்த ரோந்துக்கும் செல்லவில்லை என்றும் முதல் விசாரணையில் சொல்ல பட்ட இடத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் சார்ஆய்வாளர் பதிவு செய்த

வழக்கிற்கு ஆதரவாக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை